**வி.விஸ்வநாதன்,**
இணை நிர்வாக இயக்குநர், மேக்ஸ் லைஃப் இன்ஷூரன்ஸ்



# இன்ஷூரன்ஸ் க்ளெய்ம் நிராகரிப்பு... தவிர்க்க 5 வழிகள்!

மனித வாழ்க்கை நிலையில்லாதது. எதிர்பாராமல் நேரும் இழப்புகளின்போது, அதை அதிகமாகவே நாம் உணர்கிறோம். அத்துடன் நிதித் தேவையைச் சமாளிக்க, பாதுகாப்பான வழிமுறைகள் குறித்தும் யோசிக்கிறோம். இதுபோன்ற இடர்பாடு வரும் தருணங்களில் நிதிப் பாதுகாப்புக்கு உகந்த வழிகளில் ஒன்றாக ஆயுள் காப்பீடு விளங்குகிறது.

நாம் வாழும் காலத்திலும் அதன்பின், நம் வாரிசுகளின் நிதித் தேவைகளைச் சமாளிக்கவும் ஆயுள் காப்பீடு உதவுகிறது. இந்த நிலையில், எதிர்பாராத இழப்பின்போது, ஆயுள் காப்பீட்டுத் தொகையை வாரிசுதாரர் கோரும்பட்சத்தில், அது நிராகரிக்கப் பட்டால் என்ன ஆகும்? காப்பீட்டுதாரரின் குடும்பம் நிர்க்கதிக்கு ஆளாகும். ஆயுள் காப்பீடு செய்ததன் நோக்கமே சிதைந்து போகும். இத்தகைய நிலையைத் தவிர்க்க, ஒருவர் ஆயுள் காப்பீடு திட்டத்தில் சேரும்போது, மிகக் கவனமாக, சரியான விவரங்களை வெளிப்படையாகத் தெரிவிப்பது அவசியம். ஆயுள் காப்பீடு கோரும் விண்ணப்பங்கள் நிராகரிப்படுவதைத் தவிர்க்க, நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை இனிப் பார்க்கலாம்.

**1. விண்ணப்பத்தை நீங்களே பூர்த்திசெய்யுங்கள்**

உங்கள் ஆயுள் காப்பீட்டு பாலிசி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதில் தொடக்கம் முதல் இறுதிவரை, உங்களின் பங்களிப்பு இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். அதாவது, 'யாரையும் சார்ந்திராமல் உங்கள் வேலையை நீங்களே செய்யுங்கள்' எனப் புத்தர் கூறியது, ஆயுள் காப்பீட்டு வசதிக்கான விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்வதற்கும் பொருந்தும்.



ஆயுள் காப்பீட்டு பாலிசியை எடுக்க முடிவு செய்தால், அதற்கான விண்ணப்பத்தை அவரே பூர்த்திசெய்ய வேண்டும். மாறாக, ஆயுள் காப்பீட்டு முகவர்களிடம் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ய சொல்வதுதான், அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஆரம்பமாகிவிடுகிறது. ஒருவேளை, முகவர்களிடம் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யச் சொன்னால், விண்ணப்பம் பூர்த்திசெய்துமுடித்தபின்பு அதிலுள்ள தகவல்கள் அனைத்தும் சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். இதனால் தவறான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள், ஆயுள் காப்பீட்டு அலுவலகத்தில் பதிவாகும் நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக, இறப்புக்குப்பின், வாரிசுதாரர்கள் ஆயுள் காப்பீட்டுத்தொகையைக் கோரும்போது, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. உங்கள் குடும்பத்தினரின் நன்மைக்காக உங்கள் இன்ஷூரன்ஸ் பாலிசியின் விண்ணப்பத்தை நீங்களே பூர்த்திசெய்யுங்கள்.

**2. தகவல்களை மறைக்காதீர்கள்**

பாலிசி விண்ணப்பத்தில் நீங்கள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையில்தான், ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் வழங்கப்படுகின்றன. காப்பீட்டுதாரர்கள் சில சமயங்களில், விண்ணப்பத்தில் முக்கியத் தகவல்களைத் தெரிவிக்கத் தவறிவிடுகின்றனர். இந்தத் தவறு, பின்னாள்களில் காப்பீட்டுத்தொகை கோரி விண்ணப்பிக்கும்போது சிக்கலுக்கு வழிவகுத்துவிடுகிறது. அதனால் காப்பீட்டுதாரர்கள், குறிப்பாக, பின்வரும் மூன்று முக்கியத் தகவல்களை வழங்குவதில் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

முதலாவதாக, காப்பீட்டுதாரர் தன் நிதி ஆதாரத்தைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். இரண்டாவதாகக் குடி, புகைப்பழக்கம் மற்றும் உடல் ஆரோக்கியம் குறித்தத் தகவல்களை ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கவேண்டும். மூன்றாவதாக,

வேறு நிறுவனங்களில், ஏற்கெனவே ஆயுள் காப்பீட்டு பாலிசி எடுத்திருந்தால், அதுபற்றிய விவரங்களையும் தெரிவிப்பது அவசியம். இந்தத் தகவல்கள் அடிப்படையில்தான், ஒருவருக்கு புதிய ஆயுள் காப்பீட்டு பாலிசியை நிறுவனம் வழங்கும். நீங்கள் முழுமையான தகவல்களை அளிக்கவில்லை என்பதை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் கண்டுபிடித்தால், காப்பீடு கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அதுபோல, தகவல்களை வேண்டுமென்றே வெளியிடாமல் மறைத்தது தெரியவந்தாலும் காப்பீடுகோரும் விண்ணப்பத்தை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஏற்காது.

**3. நோய் பாதிப்புத் தகவலைக் கூற மறக்க வேண்டாம்**

நீங்கள் காப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது, உங்களுக்குள்ள நோய்கள் பற்றிய விவரங்களைத் தவறாமல் குறிப்பிட வேண்டும். காப்பீட்டுத் திட்டத்தில் சேர்வதற்கு முந்தைய 48 மாதங்களில் நோய் அறிகுறிகளோ அல்லது நோய் கண்டறியப்பட்டு அதற்கான மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வரும்பட்சத்தில், அவை ஏற்கெனவே உள்ள நோய்களாகக் கருதப்படும்.

காப்பீட்டுதாரர், தனக்குள்ள நோய்கள் அல்லது அசாதாரண உடல்நிலை குறித்த தகவலை மறைக்காமல் தெரிவிக்க வேண்டும். தகவல்கள் மறைக்கப்பட்ட விஷயம் பிற்பாடு தெரியவந்தால், காப்பீட்டுத் தொகையைப் பெற முடியாத நிலை ஏற்படும். எந்தவொரு தகவலும் மறைக்கப்படவில்லை என்பதைக் காப்பீட்டுதாரர் உறுதிசெய்து கொள்வது முக்கியம். இல்லையெனில், போதுமான தகவல்களைத் தரவில்லை எனக் கூறி, காப்பீடு கோரும் விண்ணப்பத்தை நிறுவனங்கள் நிராகரிக்கலாம்.

**4. நியமனதாரர் விவரம் தர மறக்காதீர்**

காப்பீட்டுதாரர், தனக்குப்பின் காப்பீட்டுத் தொகையைப் பெறுவோரின் பெயர் உள்ளிட்ட விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவற்றில் சில தகவல்கள் சரிவர இல்லை என்றாலும், காப்பீடு கோரும் விண்ணப்பத்தை, ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் நிராகரிக்க முடியும். அதேசமயம், நியமனதாரருக்கும், வாரிசுகளுக்கும் இடையே சுமுக உறவு இல்லாதபோது, தேவையற்ற சட்டப் போராட்டம் உருவாகும். இது, காப்பீடு செய்யப்பட்டதன் நோக்கத்திற்கு எதிராக அமைந்துவிடும்.

உங்கள் வாழ்க்கையில் நேரும் மாறுதல்களுக்கு ஏற்ப, காப்பீட்டுக்கான வாரிசுதாரரை மாற்றுவது அவசியம். இளவயதில் காப்பீடு எடுப்போர், தங்கள் பெற்றோரை நியமனதாரராக நியமிப்பர். திருமணத்திற்குப்பின், கணவன் அல்லது மனைவியை வாரிசாக மாற்றிக்கொள்வது அவசியம். குழந்தைகளையும் நியமனதாரராக நியமிக்கலாம். ஆகவே, நியமனதாரர் பதிவைத் தேவைப்படும்போது புதுப்பிப்பது அவசியம்.

**5. காப்பீட்டு பாலிசி காலாவதியாக விடாதீர்**

ஆயுள் காப்பீடு எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம், அதற்கான பிரீமியத்தைத் தொடர்ந்து செலுத்துவது. குறித்த தவணையில் பிரீமியம் செலுத்தத் தவறுவோருக்கு, ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் கூடுதலாக கால அவகாசம் அளிக்கின்றன. அதைக் கடந்தும் பயன்படுத்திக் கொள்ளாமல், பிரீமியம் செலுத்தத் தவறினால், அந்தச் சமயத்தில் ஏற்படும் இழப்புகளுக்கு, காப்பீட்டுத்தொகை கோரி, வாரிசுதாரர்கள் விண்ணப்பிக்க முடியாது. அதை நிறுவனங்களும் ஏற்காது. எனவே, முறையாக பிரீமியம் செலுத்தி வந்தால், காப்பீட்டுத்தொகை கோருவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. ஆயுள் காப்பீடு, வரி சேமிப்பிற்கான வழி மட்டுமல்ல, அது, நிதி ஆதாரத்திற்கும் உதவுகிறது. அதைச் சரியான முறையில் கையாண்டால், உங்கள் குடும்பத்தினரின் நிதித் தேவைக்கு நீங்கள் உதவலாம்.

பெரும்பாலான ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், வாரிசுதாரர்களின் காப்பீடு கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, தீர்வுகாண உதவியாகப் பயிற்சி பெற்ற அதிகாரிகளைப் பிரத்யேகமாக நியமித்துள்ளன. அவர்களை அணுகி, காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளலாம்.

நீங்கள் உங்கள் அன்பிற்குரிய குடும்பத்தினரின் நிதித் தேவைக்கு ஆயுள் காப்பீடு எடுப்பது மட்டும் முக்கியமல்ல, அதுகுறித்த தகவல்களையும் அவர்களிடம் தெரிவிப்பது அவசியம். அத்துடன் தொடர்புகொள்ள வேண்டிய ஆயுள் காப்பீட்டு முகவரின் முகவரி, காப்பீட்டு ஆவணங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம் உள்ளிட்ட தகவல்களையும், குடும்பத்தாரிடம் தெரிவித்தால், இழப்பீடு பெறுவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது!

தமிழில்: **ஏ.கே. விஜய்தேவ்**